### ரூ.8,000 கூப்பன் – 10 இலட்சம் வீடுகள்– 35 இலட்சம் மடிக்கணினிகள்

# இந்தத் தேர்தலில் தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கை, தேர்தலின் ஹீரோ மட்டும் இல்லை, ஹீரோயினும்தான்!

## திருவண்ணாமலையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பரப்புரை!



**திருவண்ணாமலை,ஏப். 2 –**

**திருவண்ணாமலை திருவள்ளுவர் சிலை அருகே, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளர் அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு நேற்று முன்தினம் தேர்தல் பிரச்சாரம் செய்தார்.**

**அப்போது அவர், ``நம் தேர்தல் அறிக்கையை, தேர்தலின் ஹீரோ என்று எப்பொழுதுமே மக்கள் சொல்வார்கள். ஆனால், இந்த முறை ஹீரோ மட்டும் இல்லை, இந்தத் தேர்தலின் ஹீரோயினும் நம் தேர்தல் அறிக்கைதான்'' என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

முதலில் சிறப்பான வரவேற்பு அளித்திருக்கக்கூடிய அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் உங்களிடத்தில் வெற்றி வேட்பாளராக நம் எ.வ.வேலு அவர்களை நம் தலைவர் அவர்கள் ஒப்படைத்திருக்கிறார்கள். வருகிற சட்டமன்றத் தேர்தலில் மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து, அவரை நிச்சயமாகச் சட்டமன்றத்துக்கு நீங்கள் அனுப்பப்போகிறீர்கள் என்பது, உங்களின் எழுச்சியைப் பார்க்கும்போது நிச்சயமாகத் தெரிகிறது.

வெற்றி வேட்பாளர், மாவட்டக் கழகச் செயலாளர் எ.வ.வேலு, அவரைப் பற்றி உங்களிடம் பேசுவதற்கு ஒன்றுமே இல்லை, உங்களுக்கே எல்லாம் தெரியும். அவரின் ஆற்றலையும் அவரது அனுபவத்தையும் நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

### ஏவாமலே வேலை செய்பவர்

கலைஞர் பலமுறை சொல்லியிருக்கிறார். `எல்லோரும் ஏவினால்தான் வேலை செய்வார்கள், ஆனால், நான் ஏவாமலே வேலையைச் செய்து முடிக்கிறவர் எ.வ.வேலு' என்று கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

எ.வ.வேலு என்றால் `எதிலும் வல்லவர் வேலு' என்று நம் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார். `எப்போதும் வல்லவர் வேலு' என்று நம் தலைவர் சொல்லியிருக்கிறார். நான் சொல்லியிருக்கிறேன், `எதிலும் எப்போதும் வல்லவர் அண்ணன் வேலு' அவர்கள் உங்களின் வேட்பாளர்.

எந்தக் காரியத்தை எடுத்தாலும், அதைச் சரியாகச் செய்து முடிக்கக்கூடியவர் அண்ணன் வேலு அவர்கள். அப்படிப்பட்ட எ.வ.வேலு அண்ணன் அவர்களை உங்களிடத்தில் தலைவர் அவர்கள் ஒப்படைத்திருக்கிறார்கள். சென்ற முறை கிட்டத்தட்ட 95,000 வாக்குகள் வித்தியாசத்தில் நீங்கள் வெற்றிபெறச் செய்திருக்கிறீர்கள். இந்த முறை குறைந்தது ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் அவரை வெற்றிபெறச் செய்து காட்ட வேண்டும்.

### கலைஞர் பேருந்து நிலையம்

இன்று ஓடி ஓடி உழைக்கிறவர். இன்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு கட்டடங்கள், பல்வேறு கட்டமைப்புகள் என பலவற்றையும் கட்டி முடித்திருப்பவர் அண்ணன் வேலு அவர்கள்தான். பெருமையோடு இருக்கக்கூடிய அனைத்துக் கட்டடங்கள், மாவட்டம்தோறும் இருக்கக்கூடிய `பிரம்மாண்ட நூலகங்கள்', `நினைவு மண்டபங்கள்', மெரினா கடற்கரையில் அமைந்திருக்கக்கூடிய நம் `கலைஞர் நினைவிடம்', கன்னியாகுமரியில் இருக்கக்கூடிய திருவள்ளுவர் சிலைக்கு அமைக்கப்பட்டிருக்கக்கூடிய `கண்ணாடிப் பாலம்', `திருவாரூர் கலைஞர் கோட்டம்'. இப்படி எல்லாமே அண்ணன் வேலு அவர்களின் உழைப்பினால் கட்டப்பட்டவை. அப்படிப்பட்ட வேலு அண்ணன் அவர்களுக்குத்தான் உரிமையுடன் உங்களிடம் வாக்குக் கேட்டு வந்திருக்கிறேன்.

இந்தத் தொகுதியில் திருவண்ணா மலையில் இன்று கலைஞர் நூற்றாண்டுப் பேருந்து நிலையம் கட்டப்பட்டது அண்ணன் வேலுவின் உழைப்பால்.

### திருவண்ணாமலை திட்டங்கள்

தருமபுரி, அரூர், திருவண்ணாமலை சாலைகள் எல்லாம் நான்கு வழிச் சாலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன என்றால், அண்ணன் வேலுவின் உழைப்பு. 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் மையம், மாணவ, மாணவியர் 400 பேர் தங்கிப் படிக்கின்ற வகையில் அரசு மாதிரி பள்ளிக் கட்டடம், நந்தன் கால்வாயைச் சீரமைக்கின்ற பணிகள், மருத்துவக் கல்லூரிக்கு மருத்துவமனைக் கட்டடங்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பராமரிப்பு மையம், கிரிவலப் பாதையில் சுகாதார வளாகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்ப்புக் கட்டட அரங்கம், அண்ணாமலையார் கோயில் மாடவீதிச் சாலையில், கான்கிரீட் சாலை மேம்பாடு, இரண்டரை கோடி மதிப்பீட்டில் சமுத்திரம் பகுதியில் கலைஞர் பன்னோக்கு அரங்கம், கூடுதல் சுற்றுலா மாளிகைக் கட்டடம். இத்தனையும் நம் வேலு அண்ணன் அவர்கள் கடந்த ஐந்து வருடத்தில் இந்தத் திருவண்ணாமலை தொகுதிக்காகச் செய்து கொடுத்திருக்கிறார்.

இன்னும் பல்வேறு கோரிக்கைகள் வைத்திருக்கிறீர்கள், அவற்றையும் செய்து கொடுப்பார்.

### மகளிர் விடியல் பயணத் திட்டம்

இன்று நம் தலைவர் என்னென்ன திட்டங்களைத் தமிழ்நாட்டுக்குச் செய்து கொடுத்திருக்கிறார்? சென்ற 2021–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் சொன்ன வாக்குறுதி ஒவ்வொன்றையும் நம் தலைவர் செய்து கொடுத்திருக்கிறார்.

முதலமைச்சராகப் பொறுப்பேற்று அவர் இட்ட முதல் கையெழுத்து - மகளிருக்கான விடியல் பயணத் திட்டம். மகளிர் ஒவ்வொருவரும் இந்த விடியல் பயணத் திட்டத்தின் மூலமாக மாதம் 900 ரூபாய் வரை சேமித்திருக்கிறார்கள்.

குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்து படிக்கவேண்டும் என்று முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக் கூடிய அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான காலை உணவுத் திட்டம்.

அரசுப் பள்ளியில் படித்துக் கல்லூரிக்குச் சென்று சேரும் குழந்தைகளுக்குப் புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் வாயிலாக மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகை நம் அரசால் வழங்கப்படுகிறது. நான் முதல்வன் திட்டம் மூலமாக 3 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கொடுத்து இருக்கிறோம்.

### மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்

ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்குக் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை நம் தலைவர் கொடுத்திருக்கிறார், மாதம் 1,000 ரூபாய் இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. அதை, சங்கிகள் கூட்டமும் அ.தி.மு.க. கூட்டமும் எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். தேர்தலைக் காரணம் காட்டி, மகளிர் உரிமைத் திட்டத்தை மூன்று மாதம் நிறுத்த வேண்டும் என்று ஒன்றிய அரசு முயற்சி செய்தது. நீதிமன்றத்துக்குச் சென்றார்கள். ஆனால், மூன்று மாதத்துக்கும் சேர்த்து 3,000 ரூபாய், கோடைக்கால சிறப்பு நிதி 2,000 என்று 5,000 ரூபாய் நம் தலைவர் அவர்கள் ஒரு கோடியே 31 இலட்சம் குடும்பங்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

இந்தத் திட்டங்கள் எல்லாம் தொடர வேண்டும் என்றால்,, மீண்டும் நம் உதயசூரியன் உதிக்க வேண்டும். பல்வேறு வாக்குறுதிகளையும் நம் தலைவர் கொடுத்திருக்கிறார்.

மகளிர் உரிமைத் தொகை மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த உடனே 1,000 ரூபாயை, 2,000 ரூபாயாக உயர்த்தித் தருவேன் என்று தலைவர் சொல்லியிருக்கிறார்.

எட்டாம் வகுப்பு வரை கொடுப்போம்

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் இன்று ஐந்தாம் வகுப்பு வரை கொடுத்துக் கொண்டு இருக்கிறோம், அதை விரிவுபடுத்தி எட்டாம் வகுப்பு வரை கொடுப்போம் என்று நம் தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் மாதம் 1,000 ரூபாய் என்பதை உயர்த்தி கல்வி ஊக்கத்தொகை 1,500 ரூபாய் கொடுப்பேன் என்று நம் தலைவர் உத்தரவு கொடுத்திருக்கிறார்.

முதியோர் உதவித்தொகை இன்று 1,200 ரூபாய் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம், அதை உயர்த்தி 2,000 ரூபாய் தருகிறேன் என்று நம் தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியத் தொகை 1,500–லிருந்து 2,500 ஆக உயர்த்தி கொடுப்பேன் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

### 35 இலட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினிகள்

இப்போது ஒரே மாதத்தில் 10 இலட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினிகளை கொடுத்தோம், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 35 இலட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி கொடுக்கப்படும். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பிணையில்லாத வங்கிக் கடன் 5 இலட்சம் வரை கொடுக்கப்படும் என்ற உறுதிமொழி கொடுத்திருக்கிறோம். அடுத்த ஐந்து ஆண்டுகளில் `கலைஞர் கனவு இல்லம்' திட்டம் - 10 இலட்சம் வீடுகள் கட்டி, பொதுமக்களுக்குக் கொடுக்கப்படும் என்ற உறுதிமொழி கொடுத்திருக்கிறார்.

### கூப்பனின் மதிப்பு 8,000 ரூபாய்

இவற்றையெல்லாம்விட மிக மிக முக்கியமான ஒரு திட்டம். அதுதான் இல்லத்தரசி திட்டம். ஆட்சி அமைந்த உடனே நம் தலைவர் அவர்கள் உங்கள் அனைவருக்கும் ஒரு கூப்பன் கொடுப்பார். அரசு ஒரு கூப்பன் கொடுக்கும். அந்த கூப்பனின் மதிப்பு 8,000 ரூபாய். அதாவது, முதலமைச்சர் அவர்கள் இல்லத்தரசி திட்டம் என்று ஒரு தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறார். நம் தேர்தல் அறிக்கையை `தேர்தலின் ஹீரோ' என்று எப்பொழுதுமே மக்கள் சொல்வார்கள். ஆனால், இந்த முறை ஹீரோ மட்டும் இல்லை, இந்தத் தேர்தலின் ஹீரோயினும் நம் தேர்தல் அறிக்கைதான்.

கலைஞர் அவர்கள்தான் பெண்கள் விறகடுப்பில் சமைத்துச் சிரமப்படக் கூடாது என்று எரிவாயு அடுப்பு கொடுத்தார். அதன் பிறகு, பெண்கள் வீட்டிலிருந்து உலக அறிவைக் கற்றுக்கொள்ள வேண்டும், எல்லாமே தெரிந்துகொள்ள வேண்டும் என்று கலைஞர் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி கொடுத்தார். அதன் பிறகு, நம் தலைவர் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டும், வேலைக்குச் செல்வதற்குச் சுலபமாக இருக்க வேண்டும் என்று விடியல் பயணத் திட்டம், கட்டணமில்லாப் பேருந்து திட்டத்தைக் கொடுத்தோம். பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை கொடுத்தோம். இன்று நம் தலைவர் வீட்டில் இருக்கக்கூடிய பெண்கள் அதிக வேலை செய்யக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு 8,000 ரூபாய் கூப்பன் கொடுத்திருக்கிறோம். இந்த 8,000 ரூபாய் கூப்பனில் உங்களுக்குத் தேவையான குளிர்சாதனப் பெட்டியோ, மிக்ஸி, தொலைக் காட்சிப் பெட்டியோ, ஏ.சி.யோ எந்த மின்சாதனப் பொருளையும் நீங்கள் சென்று வாங்கிக் கொள்ளலாம்.

### இலட்சம் வாக்குகள் வித்தியாசம்

இன்று தேதி 31, இன்னும் தேர்தலுக்கு 23 நாட்கள் இருக்கின்றன. நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்கப் போகிறீர்கள், அதை நீங்கள் முடிவு செய்துவிட்டீர்கள். ஆனால், நீங்கள் அடுத்து வருகிற 23 நாட்களும் இந்தப் பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சென்று இன்னும் சேர்க்க வேண்டும். நீங்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிற மாதிரி அண்ணன் எ.வ.வேலு அவர்களை ஒரு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

### கற்றுக்கொடுக்க வேண்டும்

நாம் இவ்வளவு வளர்ச்சித் திட்டங்களைச் செய்திருக்கிறோம், இவ்வளவு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறோம், நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம். மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இதையெல்லாம் செய்வோம் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்? இன்று மீண்டும் பா.ஜ.க.வின் அடிமையாகித் தமிழ்நாட்டுக்குள் மோடி அவர்களையும், அமித்ஷா அவர்களையும் எப்படியாவது பா.ஜ.க.வை தமிழ்நாட்டுக்குள் கூட்டிக் கொண்டு வர வேண்டும் என்று வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார். 'ஜாடிக்கேற்ற மூடி' என்று சொல்லுவார்கள். இன்று எடப்பாடி பழனிசாமிதான் மோடிக்கேற்ற ஓர் அடிமை எடப்பாடி பழனிசாமியாக மாறியிருக்கிறார். நான் அடிக்கடி நகைச்சுவையாகச் சொல்லியிருக்கிறேன், 'முரட்டு பக்தர்கள்' பார்த்திருக்கிறோம், 'முரட்டுத் தொண்டர்கள்' கேள்விப்பட்டிருக்கிறோம். இன்று எடப்பாடி பழனிசாமிதான் இந்தியாவிலேயே ஒரு நம்பர் ஒன் 'முரட்டு அடிமையாக', மோடியின் அடிமையாக இருக்கிறார். அவருக்குச் சரியான பாடத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

நம் தலைவர் சொன்ன மாதிரி, இந்தத் தேர்தல், தமிழ்நாடு Vs டெல்லி தேர்தல். இந்தத் தேர்தலில் மோடியா, நம் தலைவரா என்று பார்த்துவிட வேண்டும். மோடியா, தமிழ்நாடா என்று பார்த்துவிட வேண்டும். நம் உரிமைகளை மீண்டும் மீட்டெடுத்துக் கொடுக்க வேண்டும். தமிழ்நாடு என்றைக்கும் டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல்தான் என்பதை இந்தத் தேர்தல் மூலம் நீங்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும். அதை கண்டிப்பாகச் செய்வீர்கள் என்கிற நம்பிக்கையுடன் உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்களில் ஒருவனாகக் கேட்கிறேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன்.

### வெற்றிச் சின்னம் உதயசூரியன்

இன்னும் பெருமையாகப் பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். நம் வெற்றிச் சின்னம் உதயசூரியன் எல்லா இடத்திலும் உதித்தாக வேண்டும். அதற்குத் தமிழ்நாடு முழுவதும், நீங்கள் திருவண்ணாமலை தொகுதி முழுவதும், நீங்கள் அத்தனை பேரும் இந்தப் பிரச்சாரத்தை அடுத்த 23 நாட்கள் கொண்டு சென்று சேர்க்க வேண்டும். இன்று நான் வேலு அண்ணன் அவர்களுக்காக மட்டும் இந்தப் பிரச்சாரத்தில் ஈடுபடவில்லை. நம் கீழ்ப் பெண்ணாத்தூர் வேட்பாளர் அண்ணன் கு.பிச்சாண்டி அவர்களுக்கும், கலசப்பாக்கம் வேட்பாளர் அண்ணன் பெ.சு.தி.சரவணன் அவர்களுக்கும், செங்கம் வேட்பாளர் அண்ணன் சகோதரர் மு.பெ.கிரி அவர்களுக்கும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகப் பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். உதயசூரியனுக்கு வாக்களியுங்கள். மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் இந்தத் திருவண்ணாமலையில் இருக்கக்கூடிய அனைத்துத் தொகுதியிலும் உதயசூரியன் உதிக்க வேண்டும்.

நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய வேண்டும். நம் தலைவர் மீண்டும் இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பில் அமர வேண்டும் என்றால், திருவண்ணாமலை அனைத்துத் தொகுதியிலும் நீங்கள் வேலை செய்து உதயசூரியன் சின்னத்தை வெற்றி பெறச் செய்யுங்கள்.

இந்த அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி, நன்றி, வணக்கம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

சட்டப்பேரவைத் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணாதுரை, டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்டத் துணைச் செயலாளர் மு.பெ.கிரி, பிரியா விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநிலத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஸ்ரீதரன், பே.சு.தி.சரவணன், மாவட்ட அவைத் தலைவர் கண்ணன், பொறியாளர் அணியின் செயலாளர் எஸ்.கே.பி.கருணா, சௌந்தரராஜன், மாநகரச் செயலாளர் கார்த்திக் வேல்மாறன், மாநகராட்சி மேயர் நிர்மலா கார்த்திக் வேல்மாறன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், கோவிந்தன், ரமணன், இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ராஜாங்கம், கண்ணதாசன், திலீப், சதீஷ், ராஜேஷ், ரமேஷ், செல்வம் பிரகாஷ், பகுதிப் பொறுப்பாளர்கள் விஜயராஜ், கோவிந்தன், சண்முகம், சீனிவாசன், ஷெரீஃப், குட்டி புகழேந்தி உள்பட கழக முன்னணியினர் மற்றும் கூட்டணிக் கட்சியினர் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.